21.04.2016

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கடல்வாழ் பச்சோந்தி

கடல்வாழ் உயிரினமான கணவாய்மீன் 'கடல்வாழ்பச்சோந்தி' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளது.எதிரிகளிடம் இருந்து தப்பிக்க இவை தங்கள் உடல் மீதுள்ள நிறங்களையும் கோலங்களையும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளும் திறன் படைத்ததால் கடல்வாழ் பச்சோந்தி என அழைக்கப்படுகிறது. கருவாட்டில் உப்பு அதிகம் இருக்கும். கருவாடு உயர் ரத்த அழுத்தத்தை ஏற்படுத்தும் என்ற விழிப்புணர்வு பரவி வருகிறது. ஆனால் வெயில் காலத்தில் கணவாய் மீன்களை உப்பு போடாமல் உலர வைத்து கருவாடாக மாற்றுகின்றனர்.

### நிலத்தடி குளிர் சாதனம்!

ஐரோப்பிய ஒயின் தயாரிப்பாளர்கள் முதல், விவசாயிகள் வரை பலர், 19ம் நூற்றாண்டிலேயே 'ரூட் செல்லார்' என்ற தொழில்நுட்பத்தை பயன்படுத்தினர். அதை நவீனப்படுத்தி இருக்கிறது, டென்மார்க்கைச் சேர்ந்த, 'வெல்டெவ்ரீ' நிறுவனம். 'கிரவுண்ட் ப்ரிஜ்' என்ற இந்த குளிர்பதன பெட்டியை பூமிக்கு அடியில் புதைத்துவிட வேண்டும். இதற்குள், அலமாரிகளும், விளக்குகளும், படிகளும் உண்டு. கிரவுண்ட் ப்ரிஜின் திறன், 20 சாதாரண ப்ரிஜ்களுக்கு சமம் என்று சொல்லப்படுகிறது. இதில், 250 சதுர மீட்டர் தோட்டத்தில் விளைந்த காய்கறிகள் அல்லது, 500 கிலோ எடையுள்ள உணவுப் பொருட்களை குளிர்ச்சியாக வைத்திருக்க முடியும் என்கிறது வெல்டெவ்ரீ. பூமிக்கு மேலே என்ன வெப்பநிலை இருந்தாலும், 7 டிகிரி முதல், 15 டிகிரி செல்சியஸ் வரை கிரவுண்ட் ப்ரிஜில் குளிர்ச்சி

எப்போதும் இருக்குமாம். இந்த ப்ரிஜ், பூமிக்கடியில் உள்ள குளிர்ச்சியையே பயன்படுத்தும் என்பதால், மின்சாரம் தேவையே இல்லை என்பது தான் இதில் கவர்ச்சிகரமான அம்சம்.

## மலை காய்கறி விளைச்சல் குறைவு உழவர் சந்தையில் விலை உயர்வு

ஊட்டி: மாவட்டத்தில் மலைக் காய்கறிகளின் விளைச்சல் குறைந்ததால், ஊட்டி உழவர் சந்தையில் விலை உயர்ந்துள்ளது.

ஊட்டி உழவர் சந்தைக்கு, மக்கள் மத்தியில் 'மவுசு' அதிகம். ஊட்டி சுற்றுவட்டார பகுதிகள் உட்பட கோத்தகிரி, குன்னுார், அருவங்காடு, வெலிங்டன் என, பிற இடங்களில் இருந்தும் அதிகளவு மக்கள், ஊட்டி உழவர் சந்தையில் காய்கறி வாங்கிச் செல்கின்றனர்.

இந்நிலையில், உழவர் சந்தையில்,'மார்க்கெட் வியாபாரிகள் சிலரும், போலி கூட்டுறவு சங்கங்களின் பெயரில் சில வியாபாரிகளும் கடை அமைத்து, காய்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்' என்ற புகார் கிளம்பியது.

மேலும், 'உழவர் சந்தை விதிமுறை மீறி, பெங்களூரு, மைசூரு உட்பட பிற மாவட்டங்களில் இருந்து, வியாபாரிகள் சிலர், காய்கறிகளை வாங்கி வந்து விற்கின்றனர்' என்பன போன்ற பல குற்றச்சாட்டுகளையும், ஊட்டி மார்க்கெட் வியாபாரிகள் கூறி வந்தனர்.

அத்தகைய செயல்களில் ஈடுபட்ட வியாபாரிகளின் வாகனங்களையும் பறிமுதல் செய்தனர். இதை தொடர்ந்து, அதிகாரிகளின் நடவடிக்கையால், சமீபகாலமாக இத்தகைய புகார்கள் எதுவுமின்றி, உழவர் சந்தை செயல்பட்டு வருகிறது.

அவரை விலை விர்...

இந்நிலையில், ஊட்டிக்கு கொண்டு வரப்படும், மலைக் காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளது; இதனால், விலை உயர்ந்துள்ளது. உழவர் சந்தையில், ஒரு கிலோ உருளைக் கிழங்கு, கிலோ, 30 - 34, கேரட், பீட்ரூட், 40, பீன்ஸ், 60 ரூபாய் என விற்கப்படுகிறது. ஊட்டி அவரை, கிலோ, 130 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

உழவர் சந்தை நிர்வாகிகள் கூறுகையில்,'ஊட்டி உழவர் சந்தையில், அதிகளவு மக்கள் காய் கறிகளை வாங்கிச் செல்கின்றனர். குறிப்பாக, வார விடுமுறை, பொது விடுமுறை நாட்களில், அதிகளவு மக்கள் வருகின்றனர்.

இம்மாதம் முதல் தேதியில் இருந்து, நேற்று முன்தினம் வரை, 4 லட்சத்து 20 ஆயிரத்து 180 டன் காய்கறி விற்கப்பட்டுள்ளது; அதன் மதிப்பு, ஒரு கோடியே 37 லட்சத்து 80 ஆயிரத்து 630 ரூபாய். 1,355 உழவர்கள், வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். 42 ஆயிரம் நுகர்வோர் காய்கறிகளை வாங்கிச் சென்றுள்ளனர். தற்போது, காய்கறி விளைச்சல் குறைந்துள்ளதால், வரத்தும் குறைந்துள்ளது; இத னால், விலை சற்று உயர்ந்துள்ளது' என்றனர்.

நுகர்வோர்கள் சிலர் கூறுகையில், 'உழவர் சந்தையில் கழிப்பிடம், குடிநீர் உட்பட அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்; தவிர, வாகனங்களை 'பார்க்கிங்' செய்வதற்கு, இட வசதி ஏற்படுத்திக் கொடுத்தால், உழவர் சந்தையில் பயன்பாடு அதிகரிக்கும்' என்றனர்.

கடந்தாண்டு வியாபாரம் எப்படி?

கடந்த நிதியாண்டில், ஊட்டி உழவர் சந்தையில், 79 லட்சத்து 67 ஆயிரத்து 468 டன் காய்கறிகள் விற்கப்பட்டுள்ளது. அதன் மதிப்பு, 26 கோடியே 64 லட்சத்து 9 ஆயிரத்து 863 ரூபாய். 28 ஆயிரத்து 644 விவசாயிகள், கடை அமைத்து, தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்துள்ளனர்; 7 லட்சத்து 99 ஆயிரத்து 58 நுகர்வோர் பயனடைந்துள்ளனர்.

**முட்டைகோஸ் சாகுபடியில் 'களை'**

கோத்தகிரி: கோத்தகிரி பகுதியில் முட்டைகோஸ் சாகுபடி களைக்கட்டியுள்ளது.

நீலகிரியில், தேயிலைக்கு அடுத்தப்படியாக, நீர் ஆதாரம் உள்ள விளை நிலங்களில், மலைக்காய்கறி பயிர் செய்யப்படுகிறது. நடப்பாண்டு, மாவட்டத்தில் மழைப் பொய்துவிட்ட நிலையில்,

விவசாயிகள் சிரமங்களுக்கு இடையே, காய்கறி சாகுபடி மேற்கொண்டுள்ளனர்.

விதை, உரம், பூச்சி மருந்து உள்ளிட்ட இடுப்பொருட்களின் விலையேற்றத்தால், விவசாயிகள் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கூடுதல் சிரமத்துடன், கடன்பெற்று காய்கறி சாகுபடி செய்துள்ளனர்.

கோத்தகிரி பகுதியில், நெடுகுளா, கூக்கல்தொரை, சுள்ளிகூடு, ஈளாடா மற்றும் வ.உ.சி., நகர் உள்ளிட்ட பகுதிகளில், அதிக ஏக்கர் பரப்பளவில், முட்டைகோஸ் பயிரிடப்பட்டுள்ளது.

வறட்சி காரணமாக, ஓடைகளில் தண்ணீர் வரத்து குறைந்துள்ளதால், விவசாயிகள் ஆங்காங்கு தடுப்புகள் அமைத்து, தண்ணீரை சேமித்து, தோட்டங்களுக்கு பாய்ச்சி வருகின்றனர்.

அடுத்த ஓரிரு வாரங்களில், முட்டைகோஸ் அறுவடைக்கு தயாராக உள்ள நிலையில், விவசாயிகள் கூடுதல் கவனம் செலுத்தி பராமரித்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு, ஒரு கிலோ முட்டைகோஸ், 20 ரூபாய் வரை விலை கிடைத்து வந்த நிலையில், தற்போது, மேட்டுப்பாளையம் மண்டிகளின் நிலவரம்படி, ஒரு கிலோ முட்டைகோஸ், அதிகப்பட்சமாக, 8 ரூபாய் மட்டுமே விலைக் கிடைக்கிறது.

எனினும், தோட்டங்களில் தயாரான முட்டை கோசை விற்பனை செய்யும் ஆலோசனையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

## கோடை வெயிலால் மாங்காய் உதிர்வு

கீழக்கரை: ரெகுநாதபுரம் அருகே மேலவலசை, சங்கந்தியான்வலசை, வீரவேல்வலசை உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள் மாமரம் சாகுபடி செய்துள்ளனர். இவை தற்போது பூத்தும், காய்த்தும் வருகிறது. கோடை வெயிலின் தாக்கத்தால் பிஞ்சுகள் உதிர்ந்து வருகிறது.

விவசாயி நாகராஜ் கூறுகையில்,"வெயிலின் தாக்கத்தால் பிஞ்சுகள், பூக்கள் உதிர்வதை கட்டுப்படுத்த வேளாண்மைத்துறையினர் ஆலோசனை வழங்கவேண்டும்," என்றார்.

## வெயிலின் தாக்கம் அதிகரிப்பு: ஆற்றில் உலாவும் கால்நடைகள்

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் பகுதியில், வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க, கால்நடைகள் ஆற்றில் உலா வருகின்றன. தற்போது, கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது,
பள்ளிபாளையம் அடுத்த வசந்தநகர், பெரியகாடு, காவேரி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த, விவசாயிகளும், பொதுமக்களும், தங்கள் வளர்க்கும் ஆடு, மாடுகளை வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க, நாள்தோறும் ஆற்றில் உலா விடுகின்றனர்.

இதுகுறித்து, கால்நடை வளர்ப்பவர்கள் கூறியதாவது: தற்போது வெயிலின் தாக்கம் அதிகளவு உள்ளதால், கால்நடைகளுக்கு பல வகைகளில் சிரமம் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. கால்நடைகளை மதிய நேரத்தில் ஆற்றில் உலா வருவதற்கு விட்டு விடுவோம். இதனால், அவைகளை வெயிலின் தாக்கம் பாதிக்காது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## பருப்பு பதுக்கல்கார்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் : மாநிலங்களுக்கு மத்திய அரசு வேண்டுகோள்



புதுடெல்லி : பருப்பு விலையை கண்காணித்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. அதோடு, பருப்பு பதுக்கல்காரர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மாநிலங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. பருப்பு வகைகளின் விலை கடந்த ஆண்டு கடுமையாக அதிகரித்தது. நாட்டின் பல பகுதிகளில் ஒரு கிலோ ரூ.200ஐ எட்டியது. இதை தொடர்ந்து பருப்பு இறக்குமதியை அதிகரித்ததோடு, ஏற்றுமதியை தடுக்க கடும் கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டன. நாடு முழுவதும் திடீர் ரெய்டு நடத்தி பதுக்கப்பட்டிருந்த பருப்பு வகைகள் பறிமுதல் செய்யப்பட்டு, அந்தந்த மாநில அரசுகள் மூலம் குறைந்த விலைக்கு விற்க ஏற்பாடு செய்யப்பட்டன. இருப்பினும் சில பகுதிகளில் பருப்பு விலை கிலோ ரூ.83 முதல் ரூ.177 வரை விற்கப்படுகிறது.

பருப்பு விலையை கட்டுப்படுத்துவது குறித்து டெல்லியில் நேற்று கேபினட் கூட்டம் நடந்தது. இதன்பிறகு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் கூறியதாவது: பருப்பு விலைகளில் உள்ள ஏற்ற இறக்கங்களை நாங்கள் உன்னிப்பாக கவனித்து வருகிறோம். பருப்பு விலை உயர்வதை தடுக்க பதுக்கல்காரர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாநில அரசுகளை கேட்டுக்கொண்டுள்ளோம். இதற்கு முந்தைய மத்திய அரசு பருப்பு வகைகள் விலையை கட்டுப்படுத்த பெரிய அளவில் எதுவும் செய்யவில்லை. ஆனால், தேசிய முற்போக்கு கூட்டணி அரசு பருப்பு உற்பத்தியை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்களை கொண்டு வந்துள்ளது '' என்றார். பெரும்பாலான சந்தைகளில் தற்போது ஒரு கிலோ உளுந்து ரூ.177, துவரம்பருப்பு ரூ.163, பாசிப்பருப்பு ரூ.123 என விற்கப்படுவதாகவும், கடந்த மாதம் ஒரு கிலோ உளுந்து ரூ.172, துவரம் பருப்பு ரூ.160, பாசிப்பருப்பு ரூ.122 என விற்கப்பட்டதாகவும் நுகர்வோர் விவகார அமைச்சகம் புள்ளிவிவரம் வெளியிட்டுள்ளது.

## கொளுத்தும் கோடை வெயிலால் மக்கள் தவிப்பு முலாம்பழம் விற்பனை அதிகரிப்பு

நாமக்கல் : நாமக்கல்லில், கோடை வெப்பம் அனல் பறப்பதால் முலாம்பழம் விற்பனை அதிகரித்துள்ளது. நாமக்கல் பகுதியில் அனல் பறக்கும் வெப்பகாற்று வீசு வருகிறது. தினமும் 103 முதல் 104 டிகிரி வரை வெப்ப அளவு பதிவாகிறது. இதனால், மக்கள் சாலையில் நடந்து செல்லமுடியாமல் தவிக்கின்றனர். குளிர்பான கடைகளில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. சாலையோரம் நொங்கு, இளநீர் விற்பனையும் அதிகரித்துள்ளது.

தர்மபுரி மாவட்டம், மொரப்பூர் பகுதியில் இருந்து அதிக அளவில் முழாம்பழம் கொண்டு வரப்பட்டு நாமக்கல்லில் பல இடங்களில் சாலையோரம் குவித்து வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஒரு கிலோ, ரூ.30க்கு கிடைப்பதால் மக்கள் போட்டி, போட்டுக்கொண்டு வாங்கிச் செல்கின்றனர். தினமும் 2 டன் முலாம்பழம் நாமக்கல் பகுதியில்

விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. குளிர்பான கடைகளில் முலாம்பழ ஜூஸ் விற்பனையும் அதிகரித்துள்ளது.

### அரூரில் எலுமிச்சை விலை உயர்வு

அரூர் : எலுமிச்சை பழங்களின் விளைச்சல் குறைந்தால் அரூர் பகுதியில் விலை உயர்ந்துள்ளது. தமிழகத்தில் கடந்த ஒரு மாதகாலமாக கோடை வெயில் கொளுத்தி வருகிறது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டு விட்டது. பொதுமக்கள் கோடை வெயிலில் இருந்து தங்களை காத்துகொள்ள நீர் சத்து மிகுந்த பழங்கள் மற்றும் காய்கறிகளை வாங்கி வருகின்றனர். தற்போது வியாபாரிகள் ஆந்திர மாநிலம் கடப்பா, கூடூர், நெல்லூர் ஆகிய பகுதியிலிருந்து மொத்தமாக எழுமிச்சைகளை விற்பனைக்காக வாங்கி வருகின்றனர்.

அவற்றினை சிறு வியாபாரிகள் வாங்கி விற்பனை செய்கின்றனர். கடந்த வாரம் ஒரு மூட்டை எலுமிச்சை ரூ.3,400 விற்பனை செய்யப்பட்டது. தற்ே◌பாது வரத்து குறைந்ததால் மூட்டை எலுமிச்சை ரூ.4,500 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சில்லரை முறையில் ஒரு எலுமிச்சை ரூ.5 முதல் ரூ.7 வரை விற்பனை செய்யப்படுகிறது. கோடை வெயில் ே◌மலும் அதிகரித்தால் விலை உயர்வதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

### ஆடுகளின் விலை உயர்வு

சேந்தமங்கலம் : பண்டிகை காலத்தை முன்னிட்டு புதன்சந்தையில் ஆடுகளின் விலை உயர்ந்தது. நாமக்கல் மாவட்டம், புதன்சந்தை தமிழக அளவில் பிரசித்தி பெற்ற பெரிய சந்தையாகும். இங்கு செவ்வாய்க்கிழமை மாட்டுச்சந்தையும், புதன்கிழமை ஆட்டுச்சந்தையும் கூடுவது வழக்கம். சுற்றுப்புற பகுதியில் இருந்து ஏராளமான ஆடுகள், குட்டிகள், கிடா விற்பனைக்கு வரும். இதனை வாங்குவதற்காக நாமக்கல், சேந்தமங்கலம், எருமப்பட்டி, பவித்திரம், புதுச்சத்திரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து ஏராளமான வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் சந்தையில் கூடுவது வழக்கம்.

நேற்று கூடிய ஆட்டுச்சந்தையில் அதிகளவில் ஆடுகள் விற்பனைக்கு வந்திருந்தது. ஆடுகளின் வரத்து அதிகரித்துள்ள நிலையில், சுற்றுப்புற பகுதியில் மாரியம்மன் பண்டிகை நடைபெற்று வருவதால் இறைச்சி தேவை அதிகரித்துள்ளது. இதனால், நேற்று கூடிய ஆட்டுச்சந்தையில் 10 கிலோ எடை கொண்ட இறைச்சி ஆடு ரூ.4 ஆயிரத்துக்கு விற்பனையானது. வளர்ப்பு ஆடுகள் 3 ஆயிரத்து 900க்கு விற்றது. பிறந்து ஒரு மாதமே ஆன பெண் குட்டி 600 ரூபாய்க்கும், கிடாகுட்டி 650 ரூபாய்க்கும் விற்பனையானது.

இன்றைய வேளாண் செய்திகள்

## நிலக்கோட்டை மார்க்கெட்டில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு பூக்களின் விலை உயர்வு



நிலக்கோட்டை

சித்திரை திருவிழாவை முன்னிட்டு பூக்களின் தேவை அதிகரித்துள்ள நிலையில், நிலக்கோட்டை மார்க்கெட்டில் அவற்றின் விலை உயர்ந்துள்ளது.

வியாபாரிகள் குவிந்தனர்

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை சுற்றுவட்டார பகுதிகளான எம்.குரும்பபட்டி, மல்லணம்பட்டி, குளத்துபட்டி, கோவில்பட்டி, பிள்ளையார்நத்தம், குண்டலப்பட்டி, பள்ளப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் பூக்களை சாகுபடி செய்து வருகிறார்கள்.

அரளி, மாட்டுசெவ்வந்தி, கோழிக்கொண்டை, வாடாமல்லி, கனகாம்பரம், முல்லை, மல்லிகை போன்ற பல்வேறு வகையான பூககளை அதிகம் பயிரிட்டு வருகின்றனர். இதனாலேயே தமிழகத்தில் மிகப்பெரிய பூ மார்க்கெட் நிலக்கோட்டையில் அமைந்துள்ளது.

இந்தநிலையில் தற்போது மதுரை, அணைப்பட்டி, சின்னாளபட்டி, செம்பட்டி மற்றும் பல்வேறு இடங்களில் சித்திரை திருவிழா நடைபெற்று வருகிறது. இதனால் பூக்களின் தேவை அதிகரித்துள்ளது. எனவே நிலக்கோட்டை மார்க்கெட்டில் வியாபாரிகள் குவிந்தனர்.

<u>விலை உயர்வு</u>

இதனால் பூக்களின் விலை உயர்ந்து காணப்பட்டது. அதன்படி நேற்று மல்லிகை பூ கிலோ ரூ.150–க்கும், பிச்சிப்பூ ரூ.200, கனகாம்பரம் ரூ.300, சம்பங்கி ரூ.60, மாட்டு செவ்வந்தி ரூ.60, அரளி ரூ.250 விற்னையானது. கடந்த வாரத்தை விட பூக்களின் விலை உயர்ந்து காணப்பட்டதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இது குறித்து ஒத்தபட்டியை சேர்ந்த விவசாயிகள் கூறுகையில், மார்கழி மாதம் தொடங்கி தை மாதம் கடைசி வரை பூககள் விலை நன்றாக இருககும். மேலும் தற்போது சித்திரை, வைகாசி மாதங்களில் திருவிழா அதிகமாக இருப்பதால் விலை உயர்ந்து காணப்படுகிறது. இது பூக்களை சாகுபடி செய்த விவசாயிகள் மத்தியில் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது என்றனர்.